★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily ★ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: ஆடி 5உ வெள்ளி (20—7—56) ★ ★ வெளியூர்: ஆடி 6உ சனி (21—7—56) [இதழ் 31

தேர்தல் நிதியாக ரூ. 25 இலட்சம்

மராட்டிய சமிதி திரட்டும்

ஸ்ரீராம்பூர், ஜூலை 18—

வரும் பொதுத்தேர்தல்களில் ஈடுபடுவதற்காக, மராட்டியத்தில் சம்யுக்த மராட்டிய சமிதி, ரூ. 25 இலட்சம்வரை தேர்தல் நிதி திரட்ட முடிவு செய்திருப்பதாக ஆச்சாரியா பி. கே. ஆத்ரே என்பார் இங்கு தெரிவித்திருக்கிறார்.

தென்னாட்டுத் தொழிலுக்கு ஆபத்து!

டில்லியின் அலட்சியபுத்தி வெளிச்சம்

8 இலட்சம் கேரள மக்கள் பாதிக்கப்படுவர்

இருல் மீன் இறக்குமதிக்கு பர்மா விதித்த தடையின் எதிரொலி

எர்ணுகுளம், ஜூலை 20—

இருல் மீனைப் பதப்படுத்தி ஏற்றுமதி செய்யும் தொழிலில் இலட்சக்கணக்கான கேரள மக்கள் ஈடுபட்டிருக்கின்றனர்.

இந்தத் தொழிலைப் பாதுகாத்து, நிலையான ஒரு தொழிலாகச் செய்வதின் மூலம், பல இலட்சம் கேரள மக்களின் வாழ்விற்குப் பாதுகாப்புத் தருமாறு டில்லி சர்க்கார் கோரப்பட்டிருந்தும், டில்லி, அசட்டையாகவே இருந்து வந்திருக்கிறது.

டில்லியின் அசட்டையின் விளைவாக இன்று 8 இலட்சம் கேரள மக்கள் வாழ்விழந்து தவிக்கும் அபாயம் நெருங்கிக்கொண்டிருப்பதாகத் தெரியவருகிறது.

இதுவரையில் கேரளக் கடலில் பிடிக்கப்படும் இந்த இருல் மீனை, பர்மா சர்க்கார்தான் பெரும் அளவுக்கு இறக்குமதி செய்துகொண்டிருந்தது.

இப்போது பர்மா சர்க்கார், 'சீனாவிலிருந்து இறக்குமதி யாவதைத் தவிர வேறெங்கு மிருந்தும இந்த இருல் மீன் இறக்குமதி கூடாது' என்று தடை விதித்துவிட்டிருக்கின்றனர்.

இதனால் கேரளத்தில் பிடிக்கப்படும் இந்த மீனுக்கு 90 சதவிகித 'மார்க்கெட்'டாக இருந்துவந்த பர்மா மூடப்பட்டுவிட்டது; அதனால், சுமார் 8 இலட்சம் கேரள மக்கள் அவதிக்கு ஆளாக்கப்பட்டிருக்கின்றனர்.

ஆண்டுதோறும, 65,000 டன் வரை இந்த இருல் மீன் கேரளத்தில் பிடிக்கப்படுகிறது.

வேகவைத்து உலரச் செய்த பின் இது 13,000 டன் தேறுகிறது.

இந்தத் தொழில் கேரளத்தில் 100 ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது. சுமார் 80-ஆண்டுகளாக, பர்மா தான் இந்த மீன்களை விரும்பி வாங்கி வந்த நாடாகும். இப்போது திடீரென, 'இந்த மீன் இறக்குமதி கூடாது' என்று பர்மிய சர்க்கார் உத்தரவிட்டிருப்பதால், தென்னாட்டுத் தொழிலுக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கிறது.

டெல்லி சர்க்கார் அண்மையில், பர்மா சர்க்காருடன் அரிசி வாங்குவதற்கான ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டுள்ளது; இதன்படி இந்தியா ரொக்கமாக, அரிசிக்கு விலை தரவிருக்கிறது. ஏற்கனவே பன்முறை எடுத்துச் சொல்லப்பட்டபடி, டில்லி சர்க்கார், பர்மா அரிசிக்கு முழுவதும் ரொக்கமாக விலை தராமல், இந்த இருல் மீன்களை ஈடாக ஒரு பகுதிக்குத் தருவோம் என்று ஒப்பந்தம் செய்திருந்தால், தொழிலுக்கு இப்போது ஆபத்து வந்திருக்காது.

'இந்தத் தொழிலுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும்' என்ற எண்ணம் டில்லி சர்க்காருக்கு இருப்பதாகத் தெரியவில்லை.

கடந்த காலத்தில் பன்முறை கூறியும், இந்தத் தொழிலைப் பாதுகாக்க — நிலைப்படுத்த டில்லி எதும் செய்யவில்லை! இனியேனும் காலந் தாழ்த்தாது பர்மிய சர்க்காருடன் டில்லி பேச்சுவார்த்தை நடத்தி, ஒரு ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும்; மீண்டும் வழக்கம்போல பர்மாவிற்கு இருல் மீன் ஏற்றுமதிக்கு வழி செய்யவேண்டும்.

இந்தத் தகவல்களை, திரு-கொச்சி இருல் மீன் பதப்படுத்துவோர் கூட்டுறவு சங்கத் தலைவரான பி. கே. தேவர், அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

பாங்கி ஊழியர் கிராக்கிப்படி!

டில்லி சர்க்கார் ஆலோசனை

புதுடில்லி, ஜூலை 19—

பாங்கி ஊழியர்களின் கிராக்கிப்படி (அலவன்ஸ்)யை சுசேந்திரகட்கார் குழுவின்சிபாரிசுப்படி, வாழ்க்கைச் செலவு குறி வீழ்ச்சிக்கு ஏற்ப குறைப்பது நியாயமா என்பது குறித்து விளக்கம் கோருவதற்கு இந்திய சர்க்கார் தீர்மானித்துள்ளதாகத் தெரிகிறது.

கடந்த ஆறு மாதங்களில் வாழ்க்கைச் செலவு குறியீட்டு எண்கள், பத்து புள்ளிகளுக்கு அதிகம் குறைந்துவிட்டதாகவும், ஆகவே, ஊழியர்களின் கிராக்கிப்படிகள் குறைக்கப்பட வேண்டுமென்றும் பாங்கி நிர்வாகிகள் கூறிவந்ததாகக் கூறப்பட்டுள்ளது.

பத்து புள்ளிகளுக்கு மேல் குறைந்தால்தான் அவ்வாறு குறைக்கப்பட வேண்டுமென்று, சுசேந்திரகட்கார் குழு சிபாரிசு செய்திருக்கிறது.

வாழ்க்கைச் செலவு குறியீட்டெண் பத்து புள்ளிகளுக்கு மேல் குறையவில்லையென்றும், கிராக்கி அலவன்சுகளைக் குறைப்பதில் அர்த்தமே இல்லையென்றும் பாங்கி ஊழியர்கள் கூறுகின்றனர்.

அணுசக்தி நீர் மூழ்கிக் கப்பல்

அமெரிக்காவில் வெள்ளோட்டம்

வாஷிங்டன், ஜூலை 19—

அமெரிக்காவின் முதல் அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல், வெள்ளோட்டம் விடப்பட்டிருக்கிறது.

50,000 மைல்கள் வரை, தொடர்ச்சியாக அது பிரயாணம் செய்திருக்கிறதாம்.

இந்தத் தகவல், முதன் முறையாக வெளியிடப்பட்டிருக்கிறது.

ஏழ்மையும், கல்வியின்மையும் தற்கொலைக்குக் காரணங்கள்

5 ஆண்டுகளில் 11,29 தற்கொலைச் சம்பவங்கள்

சௌராஷ்டிரா விசாரணைக்குழு அறிக்கை

ராஜ்கோட், ஜூலை 19—

1951-ம் ஆண்டிலிருந்து 1955-ம் ஆண்டு வரையில், சௌராஷ்டிர மாநிலத்தில், 1,129 தற்கொலைச் சம்பவங்கள் நிகழ்ந்திருப்பதாக சர்க்கார் நியமித்த விசாரணைக் குழு ஒன்று கணக்கிட்டிருக்கிறதாம்.

1955-ம் ஆண்டில் மட்டும் 2[illegible] ஆண்களும் தற்கொலை புரிந்துகொ[illegible]னராம; 1952-ல், 139 பெண்களும், 89 ஆண்களும் தற்கொலை செய்துகொண்டிருக்கின்றனர்.

சௌராஷ்டிர மாநிலத்தில் அதிகரித்து வரும் தற்கொலைச் சம்பவங்களுக்கான காரணங்களை ஆராயவும், அவற்றை நீக்குவதற்கான வழிவகைகளைக் கூறவுமாகக் கடந்த ஆண்டு இறுதியில், தேவஜி தேத்ரா என்ற எம். எல் ஏ. என்பார் தலைமையில் ஒரு விசாரணைக் குழு நியமிக்கப்பட்டது.

குழு நியமிக்கப்பட்ட மூன்று மாதங்களுக்குள்ளாகவே 110 தற்கொலைச் சம்பவங்கள் நிகழ்ந்தன. அவற்றை முழுவதுமாக குழு ஆராய்ந்தது.

ஏழ்மை, வேலையில்லாமை, கல்வியின்மை, துன்பம் நிறைந்த குடும்ப வாழ்க்கை, பழங்காலத்திய திருமணப் பழக்கங்கள் ஆகியவைதான் தற்கொலைக்கான மூல காரணங்கள் என்றும், பொதுவான பொருளாதார முன்னேற்றம், கல்வி முன்னேற்றம், கூட்டுக் குடும்ப முறை, திருமணம் இவற்றில் முற்போக்கான கருத்துக்கள், குடும்ப வைத்தியசாலைகள் முதலியன கிடைக்கச் செய்வதின் மூலம் இவற்றைப் பெருமளவுக்கு நீக்க முடியும் என்றும், குழு தன் அறிக்கையில் கருத்து அறிவித்துள்ளது.

மாநில புது அமைப்பு: டில்லி உள்நாட்டிலாகா ஜரூர்

சர்க்கார் ஊழியர்கள் இடமாற்றம் குறித்து அறிவிப்பு

புதுடில்லி, ஜூலை 19—

மாநிலப் புது அமைப்பிற்கு உட்படுகிற மாநிலங்களைச் சேர்ந்த மந்திரிகள் அடங்கிய குழுக்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றன.

ஒன்றோடொன்று இணைந்து, இரண்டோ மூன்றோ சேர்ந்து அமைகிற புதிய மாநிலங்களின் நிர்வாக விவகாரங்களை, சம்மந்தப்பட்ட மாநில மந்திரிகளடங்கிய இந்தக் குழு கவனிக்குமாம்.

இந்தக் குழுவினர் — புதிய மாநிலங்களுக்கான தலைமைச் செயலாளர், பிரதம போலீஸ் அதிகாரிபோன்ற பிரதான உத்தியோகங்களுக்கான நபர்களைப் பொறுக்குமாறு கோரப்பட்டிருக்கின்றனராம்.

ஏனெனில், அப்போதுதான் இந்த அதிகாரிகள், புதிய மாநிலத்திற்கான இலாகா நிர்வாகங்களை முன்கூட்டியே ஒழுங்குபடுத்துவது முடியும் என்று கருதப்படுகிறதாம்.

புதிய தலைநகரங்களில், மாநிலத்தின் எல்லா அலுவலகங்களையும் வைத்துக்கொள்ள இயலாது போனால், வேறு பல இடங்களில்,

(4-ம் பக்கம் பார்க்க)

திபெத்தில் கொரில்லாப்போர்

சீன ஆட்சிக்கு எதிராகப் புரட்சி?

டாங்கிகள் முடுக்கிவிடப்படுகின்றன

கலிம்பாங், ஜூலை 19—

திபெத்தில் சீனக் கம்யூனிஸ்டு ஆட்சிக்கு எதிராகத் தோன்றியுள்ள புரட்சியை பரவவொட்டாது தடுக்கவும், லாசா பகுதியினைப் பாதுகாக்கவுமாக ஆட்சியாளர், டாங்கிகளை 'முடுக்கி'விட்டிருக்கின்றனர் என்று தெரியவருகிறது.

கிழக்கு திபெத்தில் சீனர்களுக்கு எதிராக நடைபெறும் 'கொரில்லா'ச் சண்டை பற்றியதும், இப்போது காவலில் உள்ள மூன்று 'விடுதலை' இயக்கத் தலைவர்களை விடுவிக்க பீகிங் மறுத்து வருவது பற்றியதுமான செய்திகள் திபெத்திய தலைநகரில் நெருக்கடியை அதிகரித்துள்ளன என்றும் கூறப்படுகிறது.

மூன்று லாசா மடத் தலைவர்களும் கோரியபடி, கைது செய்யப்பட்டுள்ள மூன்று தலைவர்களும் விடுக்கப்படுவர் என்று, முன்பே திபெத்திய சீன அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றனர்.

சீனத் துருப்புகளுக்கும் — கொரில்லாப் படையினருக்கும், இன்னும் கடும்போர் நடந்துகொண்டிருப்பதாக 'யாத்திரீகர்'கள் தெரிவித்திருக்கிறார்கள்.

கிழக்கு திபேத் வழியாக, லாசாவிற்கு உள்ள வழிகள் யாவும் கொரில்லா நடவடிக்கைகளின் விளைவாகமூடப்பட்டுவிட்டன என்றும், ஒரேவழி மட்டுமே மிச்சமாக உள்ளது என்றும் கூறப்படுகிறது.

நம் நாடு

தி.மு.கழகத்தின் இதழ் ... ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 20—7—'56 வெள்ளி

அலை அலையாய் ஆபத்து

கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள், இந்த நாட்டின் 'தலைவிதி'யை நிர்ணயிக்கும் அதிகாரத்தை தங்கள் கையில் சிக்க வைத்துக் கொண்டிருப்பவர்களால், அலைக்கழிக்கப்படும் பரிதாபம் சொல்லுந்தரமன்று!

'செய்யும் தொழில் யாவும் சீர்தூக்கிப் பார்க்கின், நெய்யுந் தொழிலுக்கு நிகரில்லை' என்ற வள்ளுவன் தந்த மதிப்பு மண்ணாகிப்போய், கைத்தறி நெசவாளர் என்றாலே, 'நாட்டு மக்களின் இரக்கத்தினால் உயிர் வாழ வேண்டிய பரிதாபத்திற்குரியவர்கள்' என்ற நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கின்றனர் —நெசவாளப் பெருமக்கள்!

'பட்ட காலிலே படும்' என்பதுபோல, கைத்தறி நெசவாளர் சமுதாயம், தொடர்ந்து, தொல்லைகளையே எதிர்நோக்க வேண்டியதாகவுள்ளது!

'நூல் கிடைக்கவில்லை; கள்ளமார்க்கெட்டில் கொள்ளை விலை தந்து நூல் வாங்கி, நெய்வதற்குக் கட்டுப்படியாவதில்லை' என்ற ஒரு தொல்லை, நெசவாளர் வாழ்வைத் துளைத்துக் கொண்டிருந்தது.

இந்தத் தொல்லை, பெரும் பாடுபாட்டிற்குப் பிறகும், போராட்டத்திற்குப் பிறகும், சற்றுக் குறைந்தபோது, புதியதோர் தொல்லை—சிக்கல் எழுந்தது.

'கிடைத்த நூலைக் கொண்டு நெய்த ஆடைகள், கடைகளில் விற்பனையாகாமல் தேங்கிக் கிடக்கின்றன; வாங்குவாரில்லை; அதனால் மேலும் நெய்ய வழி இல்லை; வாழவும் வழி கிடைக்காமல் தெருவில் நிற்கிறோம்'—என்ற அவலக்குரல் கிளம்பிற்று.

இந்த அவல நிலையைப் போக்குவதற்கு, நாட்டு மக்கள் கருணை காட்டவேண்டி நமது கழகம் மேற்கொண்ட முயற்சி நாடறிந்ததே! அதன் விளைவு, 'கைத்தறியாளரிடம் நமக்கு அனுதாபம் வேண்டும்' என்று, கழகம், மக்கள் உள்ளத்தில் எழுப்பிய எண்ணம் இன்றும் ஓரளவுக்கேனும் கைத்தறியாளரை வாழ்வித்து வருகிறது.

இந்தக் குறிப்பிட்ட சிக்கலுக்குப் பரிகாரம் தேட சென்னை சர்க்கார் மேற்கொண்ட முயற்சி, தோல்வியையே பரிசாகப் பெற்றது.

சென்னை சட்டசபை, ஒருமுகமாக, 'கரைபோட்ட வேட்டி—சேலைகள் நெய்யும் உரிமையை பிரத்தியேகமாகக் கைத்தறிகளுக்கே வழங்க வேண்டும்; அவற்றை நெய்யக் கூடாதென ஆலைகளுக்குத் தடைவிதிக்க வேண்டும்' என்று ஒரு தீர்மானம் நிறைவேற்றி, டில்லிக்கு அனுப்பி வைத்தது.

தீர்மானம், டில்லி பெரிய மனிதர்களின் கவனத்தைக் கவர்ந்து, அங்கீகாரத்தைப் பெறுவதற்கு மாறாக, குப்பைத் தொட்டியின் வாசனை நுகர்வதற்கே அனுப்பி வைக்கப்பட்டது!

தீர்மானத்தை நிறைவேற்றிய சென்னையின் 'பிரபல தலைவர்'களுக்கு, தீர்மானம் ஒன்று அப்படி நிறைவேற்றினோம் என்பதே மறந்து போய்விட்டது போலும்!

இந்த நிலையில், சீறி எழுந்து பாய்ந்தோடிவரும் அலை ஒன்று கரையைத் தொட்டு மீண்டும் கடலுக்குள் செல்வதற்குள்ளாகவே மற்றோர் பேரலை எழுந்தோடி வருவதைப்போல, கைத்தறியாளர்களுக்கு மீண்டும் ஓர் ஆபத்து முளைத்திருக்கிறது.

'கைத்தறிகளை ஒழித்துவிட்டு விசைத் தறிகளைப் புகுத்தப் போகிறோம்' என்ற டில்லியின் புதிய கொள்கையைத்தான் குறிப்பிடுகிறோம்.

இந்தக் கொள்கையை, தமிழ்நாடு கைத்தறியாளர் சங்கம், சென்னை மாநில கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம், சேலம் கைத்தறியாளர் சங்கம் முதலியன முழுமூச்சோடு எதிர்த்திருக்கின்றன; 'புதிய கொள்கையை அமுல் செய்வதின்மூலம் இலட்சக்கணக்கான கைத்தறி நெசவாளர் வேலை இழந்து தவிப்பர் — திண்டாடுவர்; சமூக அமைதி குலையும்' என்று எச்சரித்திருக்கின்றனர்.

சென்னை மாநில சர்க்காரும், இதுநாள்வரை, விசைத்தறிகள் வேகமாகப் புகுத்தப்படுவதை எதிர்த்தே வந்திருக்கின்றனர். ஆனால் இப்போது, டில்லியின் முடிவுக்குத் தலையாட்டிவிட முடிவு செய்யவிருப்பதாகத் தெரிய வருகிறது.

தற்கொலைக் கொப்பான முடிவை சென்னை சர்க்கார் மேற்கொண்டால் விளைவு, அதிலேயே அடங்கியிருக்கிறது. முடிவினை மேற்கொள்ளுமுன் சென்னை சர்க்கார், பன்முறை சிந்தித்தாக வேண்டும்; ஏனென்றால் இது பல இலட்சம் கைத்தறியாளர் [illegible] வாழ்வை [illegible] உயிர்ப் பிரச்சினையாகும் என்பதை இங்கு நினைவூட்ட விரும்புகிறோம்.

அலை அலையாய் வரும் ஆபத்துக்களிலிருந்து கைத்தறியாளர்கள் என்றுதான் விடுவிக்கப்படுவரோ?

சீனாவிலிருந்து அரிசி இறக்குமதி

விலை விநியோகம் பற்றி இந்தியா பேச்சுவார்த்தை நடத்தும்

புதுடில்லி, ஜூலை 18—

சீனாவிலிருந்து இரண்டு இலட்சம் டன் அரிசியைத் தருவிப்பது சம்பந்தமாக சீனாவுடன் இந்திய சர்க்கார் அதிகாரி நடத்தப்போகும் பேச்சு வார்த்தையின் அடுத்த கட்டம் பீகிங்கில் நடைபெறுமெனத் தெரிகிறதாம். அரிசி விலை விநியோகம் ஆகியவைகளே பேச்சு வார்த்தையில் முக்கிய அம்சமாக இருக்குமென நம்பப்படுகிறது.

திருச்சி மாவட்டத்தில் மண் அரிப்பைத் தடுக்க!

சென்னை, ஜூலை 19—

திருச்சி மாவட்டத்தில் ஆதனக்கோட்டை, கரம்பக்குடி, பெரம்பலூர் ஆகிய இடங்களில், 960 ஏக்கரா பரப்பளவில், மண் அரிப்புத் தடுப்பு வேலைகளை, ரூ. 1,02,320 - செலவில் நடத்துவதற்கு அனுமதியளித்துள்ளனராம்.

கட்சிப் பொதுச்செயலாளருக்கு கம்யூனிஸ்டுகள் கண்டனம்

நிதி நிலைமையில் ஊழல்கள் எனப் புகார்

அடிக்கடி ரஷ்யா போய்விடுவதாகக் குற்றச்சாட்டு

புதுடில்லி, ஜூலை 18—

கம்யூனிஸ்டு கட்சியின் மத்தியக் கமிட்டிக் கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது, கட்சிப் பொதுச்செயலாளர் பலத்த கண்டனத்திற்கு ஆளானார் என நம்பகமாகத் தெரியவருகிறதாம். ஐந்து வகையான குற்றச்சாட்டுகள் அவர் மீது சுமத்தப்பட்டனவாம்.

கட்சியின் நிதி விவகாரத்தில் பல ஒழுங்கீனங்கள் காணப்பட்டன என்றும், அதுவே பொதுச்செயலாளர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளுள் தலையாயது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஒரு இரகசியமான அரசியல் அறிக்கையை அவர் வெளியிட்டது அவரது அலட்சியப் போக்கைக் காட்டுவதாகவும் கூறப்பட்டதாம்,

மேலும், உடல் நலக் குறைவுக்குச் சிகிச்சை பெறுவதற்கென அடிக்கடி அவர் ரஷ்யா போய்விடுவதாயும், அதனால் கட்சி வேலைகள் வெகுவாகப் பாதிக்கப்பட்டதாயும் குற்றம் சாட்டப்பட்டதாம்

இவைகளை எல்லாம் ஏற்றுக்கொண்டு, கோஷ், தான் வருந்துவதாகவும், இனி அம்மாதிரி எல்லாம் நடந்துகொள்வதில்லை என உறுதி கூறியதாகவும் கூறப்படுகிறது.

எங்கே? எப்போது?

சர்க்கார் நிறுவும் புதிய எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலை

புதுடில்லி, ஜூலை 19—

சர்க்கார் துறையில், ஒரு எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலை நிறுவுவது குறித்து சீக்கிரமே முடிவு எடுக்கப்படும் என்று இயற்கை வள ஆராய்ச்சித் துறை அமைச்சர் மாளவியா, மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

'எங்கே, எப்போது அது நிறுவப்படும்? தனியார் எவ்வளவு தூரம் அதில் பங்குகொள்ள அனுமதிக்கப்படுவர்?'—என்பது எல்லாம், சர்க்காரின் தீவிரமான பரிசிலனையிலிருப்பதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

நிமிடத்திற்கு 300 வார்த்தைகள் வீதம்!

சுருக்கெழுத்து எழுதுபவர்

புதுடில்லி, ஜூலை 17—

நிமிடத்திற்கு 300 வார்த்தைகள் வீதம் 'சுருக்கெழுத்து' எழுதுவது என்பது ஆச்சரியத்திற்குரியதுதான்! ஆனால், எழுதிக் காட்டியிருக்கிறார் அமெரிக்க அதிகாரி ஒருவர்!

எம். ஐ இ. கிளிக்மான் என்ற அமெரிக்க நீதிமன்ற நிருபர் ஒருவர்தான் அவ்வளவு வேகமாக எழுதுபவராவார்!

அவர் இப்போது உலகத்தைச் சுற்றி வருகிறார்.

நிமிடத்திற்கு 240 வார்த்தைகள் விகித வேகத்தில் எழுதுவதற்கான வழிகளையும் அவர் கற்றுத் தருகிறாராம்!

இந்தியாவில் உள்ள நிருபர்களுக்கும், சுருக்கெழுத்தாளர்களுக்கும் மிகக் குறைவான சம்பளம் தரப்படுவதாக அவர் குறைபட்டுக் கொண்டாராம்!

எதேச்சாதிகார முடிவை அமுலாக்க டில்லி பெரிய மனிதர்கள் முஸ்தீபு

காங்கிரஸ் உறுப்பினர்களுக்கு வாய்ப்பூட்டு

புதுடில்லி, ஜூலை 19—

டில்லி பெரிய மனிதர்கள், மாநில புனரமைப்பு விவகாரத்திலும், வேறெல்லா விவகாரத்தையும் போலவே தங்களின் எதேச்சாதிகார முடிவை அமுல் செய்வதற்காக, மக்கள்சபை காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர்களின் உரிமைகளைப் பிடுங்கிக்கொள்ள முடிவெடுத்துவிட்டனராம்!

'கட்சிக் கட்டுப்பாடு' என்ற பெயரில், காங்கிரஸ் உறுப்பினர்களுக்கு வாய்ப்பூட்டுப் போடப்படுமாம்!

மாநிலப் புதுஅமைப்பு மசோதா, பீகார்—மேற்கு வங்க நில மாற்ற மசோதா ஆகியவைகள் மக்கள் சபைக்கு வரும்போது, காங்கிரசார் சுதந்திரமாக ஓட்டுச் செய்ய அனுமதிக்கப்படமாட்டார்களாம்!

பீகார் மாநிலத்தைச் சேர்ந்த காங்கிரஸ் உறுப்பினர்கள், இந்த மசோதாக்கள் விவாதிக்கப்படும்போது, சுதந்திரமாக வாக்களிப்பதற்குத் தங்களை அனுமதிக்க வேண்டும் என்று கோரினர் என்றும், அதன் விளைவாகவே இந்த வாய்ப்பூட்டுச் சட்டம் வருகிறது என்றும் தெரியவருகிறது.

இலங்கையில் ஒரு எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலை

ஆங்கிலோ - அமெரிக்க நிறுவனத் திட்டத்தை பிரதமர் நிராகரிக்கிறார்

கொழும்பு ஜூலை 18—

ரூ. 17½ கோடி செலவில் இலங்கையில் ஒரு எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலை நிறுவுவது பற்றிய ஆங்கிலோ—அமெரிக்க கம்பெனி ஒன்றின் திட்டத்தை, இலங்கை சர்க்கார், 'கம்பெனி கூறும் நிபந்தனைகள் கடினமானவை' என்று கூறி நிராகரித்து விட்டதாகத் தெரிய வருகிறது.

இந்தத் திட்டம் முன்னைய சர்க்காரின் பரிசிலனையிலிருந்ததாம்.

இந்தத் தகவலை பிரதமர் அறிவித்திருக்கிறார்.

'நாம், ஒரு எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலை நிறுவுவது என்ற எண்ணத்தையே கைவிட்டு விடவில்லை; மேலும் அதுபற்றி ஆராய்ந்துகொண்டிருக்கிறோம். இந்தக் குறிப்பிட்ட கம்பெனியைத் தவிர இதர சிலரும் இதில் அக்கறை கொண்டிருக்கிறார்கள்" என்றும் பிரதமர் கூறினாராம்.

300 அல்ஜீரியர்கள் படுகொலை

1,200 பேர் சந்தேகத்தின் மீது கைது செய்யப்பட்டனர்

பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தின் அட்டகாசம்,

அல்ஜீரியா, ஜூலை 18—

கடந்த 24 மணி நேரத்தில் பிரெஞ்சுத் துருப்புகள் அல்ஜீரிய தேசியவாதிகளில் 300 பேர்களைக் கொன்று குவித்தனர் என்று தெரியவருகிறது.

தேசியவாதிகளுக்கு உதவுபவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் அல்ஜீரிய நகருக்குத் தெற்கே சுமார் 1200 பேர்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

புதிய ஆந்திரத்தின் பெயர் என்ன?

புதுடில்லி, ஜூலை 18—

ஆந்திராவும் — தெலிங்கானாவும் இணைவதையொட்டி எழும் பிரச்சினைகள் குறித்து, மேலிடத்துடன்; இரு பிரதேசத் தலைவர்களும விவாதித்துக் கொண்டிருக்கின்றனர் என்று தெரியவருகிறது.

இவர்களிடையே புதிய பெரிய ஆந்திரத்தின் பெயர் குறித்து ஒரு உடன்பாடு இன்னும் ஏற்படவில்லையாம்!

புதிய ஆந்திரத்தின் உயர் நீதிமன்றம் ஐதராபாத்தில் இருக்க வேண்டும் என்று ஆந்திரத் தலைவர்கள் விரும்புகின்றனராம்; தெலிங்கானா தலைவர்கள் ஆந்திராவின் வழக்கு விவகாரங்களைக் கவனிக்க, குண்டூரில் ஒரு பிரிவு வேண்டும் என்று கூறுகின்றனராம். இப்படி இரு சாராருக்கும் கருத்து வேறுபாடு இருந்துவருவதாகக் கூறப்படுகிறது.

உ.பி. மாநிலத்தில்

மேலும் தொழிற்சாலைகள்

நிறுவுவதற்கு திட்டக்குழு அனுமதி

லக்னோ, ஜூலை 18—

உத்தர பிரதேச மாநிலத்தில், கூட்டுறவு முறையில் நான்கு புதிய சர்க்கரை ஆலைகளை நிறுவவும், சர்க்கார் நடத்திக்கொண்டிருக்கிற சிமெண்ட் தொழிற்சாலை, நுண் கருவி உற்பத்திச் சாலை இவற்றை அபிவிருத்தி செய்யவுமான திட்டங்களுக்கு டில்லி அனுமதியளித்துவிட்டதாக திட்டக் குழுவினர் தெரிவித்திருக்கின்றனர்.

12 தொழிற்சாலை நிறுவுவதற்கான திட்டம் ஒன்றையும், ரூ. 30 கோடி செலவில் தொழில்கள் நிறுவுவதற்கான திட்டம் ஒன்றையும் திட்டக் குழு நிராகரித்து விட்டதாம்.

அச்சத்தின் அடிப்படையில் எதிர்ப்பு எழுந்ததாம்!

புதுடில்லி, ஜூலை 19—

"புதிதாக விசைத் தறிகளை நடைமுறைக்குக் கொண்டுவருவதை அனுமதிக்கலாம் என்ற அரசாங்கத்தின் உத்தேச முடிவுக்கு எதிர்ப்புகள் கிளம்பியுள்ளன; விசைத்தறி புகுதலால், கைத்தறி நெசவாளர் பலர் தொழில் செய்யும் வாய்ப்பினை இழந்து, வேலையில்லாக் கொடுமை மிகப் பெரியதாக வளர்ந்துவிடும் என்ற அச்சத்தின் அடிப்படையில் எதிர்ப்புகள் எழும்பியுள்ளன,"

என்று, மத்திய தொழில் வணிக அமைச்சர் வட்டாரம் கூறியிருக்கிறது.

இரண்டாவது திட்டத்தில் ஏற்படுமென்று எதிர்பார்க்கப்படுகிற அதிகமான துணித் தேவையைச் சமாளிக்க வேண்டும் என்ற நோக்கத்துக்காகவே புதியதாக விசைத் தறிகளைப் புழக்கத்துக்குக் கொண்டுவர வேண்டுமென்று இந்திய அரசாங்கம் முடிவு செய்ததாம்.

அவ்வளவுதானே?

புதுடில்லி, ஜூலை 19—

இவ்வாண்டு மே, ஜூன் மாதங்களில் கல்கா, மற்றும் இதர இடங்களில், இரயில்வேத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்தின் காரணமாக, இந்திய இரயில்வேக்களுக்கு ஏறக்குறைய ரூ. 40 இலட்சம் நஷ்டம் ஏற்பட்டிருப்பதாக, மக்கள் சபையில் தகவல் தரப்பட்டுள்ளது.

அணு குண்டு சோதனைகளால் இயற்கைக்கு மாறான விளைவுகள்

ஆதாரங்களுடன் விளக்குகிறார் செயற்கைமழை நிபுணர்

நியூயார்க், ஜூலை 19—

1945-ம் ஆண்டு முதல் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ள அணு குண்டு சோதனைகளின் காரணமாக வானிலை பாதிக்கப்படுவதாகக் கூறுவதும், கருதுவதும் தவறானதாகுமென்று உலக வானிலை நிபுணர்கள் சங்கமும், அமெரிக்க விஞ்ஞானிகள் கழகமும் வெளியிட்டிருக்கும் கருத்திற்கு எதிராகவும், அக்கூற்றுக்கு 'சவால்' விடுத்தும் பிரபல செயற்கை மழை ஆராய்ச்சி நிபுணரொருவர் விளக்கம் தந்துள்ளார்.

"அமெரிக்க வளைகுடாவில் முதல் அணுகுண்டு பரீட்சார்த்தமாக வெடிக்கப்பட்டது; அந்த ஆண்டில், சூறாவளிகள், வளைகுடாவிலிருந்து மேல் நோக்கிச்சென்று, நியூ இங்கிலாந்திலும், அதன் வடக்கிலும் கடுமையாக வீசியது; கடும் புயல்களின் தொகைஅதிகரித்தன. 1951-ம் ஆண்டு 300 ஆக இருந்தது—1953-ல் 532 ஆகவும் 1954-ல் 699 ஆகவும், 1955-ல் 900-மாகவும் உயர்ந்தன. கடந்த நூறு ஆண்டுகளில் கண்டிராத கடும் குளிரினால் ஐரோப்பா பாதிக்கப்பட்டது; ஸ்பெயினிலுள்ள மலாகாவில், 70 ஆண்டுகளுக்குப் பிறகு முதன் முதலாக பனி பெய்தது; கடந்த 500 ஆண்டுகளில் கண்டிராத கடும் வெள்ளத்தினால் ஹாலந்து மிகக் கொடுமையாகப் பாதிக்கப்பட்டது.

"1955-ம் ஆண்டு நவம்பரில் ரஷ்யாவின் நீர்வளிக் குண்டு பரிசோதிக்கப்பட்டதைத் தொடர்ந்து பாரிஸிலும், இதர நகரங்களிலும் கதிரியக்கத் தூசிகள் விழ ஆரம்பித்தன. நியூயார்க்கிலுள்ள பவல்லோ நகரம் நவ. 29-ந்தேதி கடும் பனியில் புதைந்து கிடந்தது இரண்டு வாரங்களுக்குப் பிறகு ஸ்காண்டிநேவியாவில் கடும்பனிப் புயல் அடித்ததாக அறிவிக்கப்பட்டது. டிச. 16-ந்தேதி கலிபோர்னியாவிலும், ஒரிகானிலும், 60 மைல் வேகத்தில் பேய்க்காற்று அடித்தது; மறுநாள் காற்றின் வேகம் 110 மைலுக்கு அதிகரித்தது. இம்மாதிரியான பருவ நிலை மாறுதல்கள் எல்லாம், வழக்கத்திற்கு விரோதமானவையாகும்.

"அணு குண்டு, நீர்வளிக்குண்டு சோதனைகளால்தான் கடும் குளிர் ஏற்பட்டது என்பதை ஏற்க முடியாதெனக் கூறுவது உசிதமல்ல; மேலே கூறியிருக்கும் சம்பவங்கள் எல்லாம், மக்களின் சிந்தனை சக்தியைத் தூண்டிவிட்டு, ஆராய்ச்சியை அதிகரிக்கவே தெரிவித்துள்ளேன். இயற்கைக்கு மாறான இச்சம்பவங்களுக்குக் காரணம் காட்டப்படவில்லை. அணு குண்டு சோதனைகளினால்தான் இந்த சம்பவங்கள் எல்லாம் ஏற்பட்டுள்ளன என நிரூபிக்கப்பட்டால், அணு ஆயுத சோதனைகளை கைவிட வேண்டுமென இந்தியா போன்ற நாடுகள் கேட்பதற்கு ஒரு தக்க காரணம் கிடைக்கும்."

மக்கள் சபையில் புயல்!

புதுடில்லி ஜூலை 18—

தோழர் எச். வி. காமத், மக்கள் சபையில் எழுப்பிய கேள்வி ஒன்று சிறு புயலைக் கிளப்பியிருக்கிறது

இங்கிலாந்தில் ஜீப் கார் வாங்கியதில் நடைபெற்ற ஊழல்களைப் பற்றியது, அந்தக் கேள்வி!

இதை ஒட்டி, பல உப கேள்விகள் எழுந்தன.

கேள்விகளை, சபைத் தலைவர், 'விஷய சம்மந்தமில்லாதவை-உள் நோக்கமுடையவை' என்று கூறி, தள்ளிவிட்டிருக்கிறார்.

உடனே ஹிரேன் முகர்ஜி என்ற உறுப்பினர் எழுந்து, 'விஷய சம்மந்தமில்லாதது என்பதாலேயே ஒரு கேள்வியை தலைவர் தள்ளிவிடுவதற்கு உரிமை படைத்தவர் அல்லர்; மேலும், இது சபையின் நடவடிக்கையை கேலிக்கூத்தாக ஆக்குவதாகும்," என்று கூறியிருக்கிறார்.

"அது மட்டுமல்ல; பாசாங்கு, பரிகாசம்கூட,' என்று, காமத் கூறியிருக்கிறார்.

உடனே சபைத் தலைவர், தனது நாக்கினைப் புரட்டி, 'நான் கேள்வியை தள்ளியதற்குக் காரணம், 'அது, உள்நோக்கம் கற்பிப்பதாக இருக்கிறது என்பதால் தான், என்று கூறியிருக்கிறார்.

விலை உயர்வைத் தடுக்க நடவடிக்கை?

வியாபாரிகளுக்குக் கடன் தருவது கட்டுப்படுத்தப்படும்

புதுடில்லி, ஜூலை 18—

விலைவாசிகள் உயர்வையும், பொருள்களைப் பதுக்குவதையும் தடுப்பதற்காக, கடன் கொடுப்பதைக் கட்டுப்படுத்த ரிசர்வ் பாங்கிக்கு அதிகாரமளிக்கும் சட்ட திருத்த மசோதாவின் முதல் வாசிப்பு, மக்கள் சபையில் நிறைவேறியிருக்கிறது.

உணவுத் தானியங்கள் மீது வியாபாரிகளுக்கு பாங்கிகள் கடன் தருகின்றன; இவ்வாறு வியாபாரிகளுக்குப் பாங்கிகள் கடன் தருவதை, புதிய சட்டப்படி ரிசர்வ் பாங்கி கட்டுப்படுத்தும்; இதன் மூலம் விலை உயர்வும், பதுக்குதலும் ஏற்பட இயலாது என்பதே நோக்கமாகும்

வெளியேற்றம் நீடிக்கிறதாம்!

கராச்சி, ஜூலை 19—

சென்ற மே மாதத்தில், கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து 30,493 முஸ்லீமல்லாதவர்கள் வெளியேறி, வந்திருக்கிறார்களாம்!

அதிகாரபூர்வமான புள்ளிவிவரங்களின்படி, ஏப்ரலில் 22 760 பேர்களும், மார்ச்சில் 55,381 பேர்களும் வெளியேறியுள்ளதாகத் தெரிகிறது.

இலங்கைக் குடி உரிமை மனுக்கள்

துரிதமாக முடிவுசெய்ய அதிக சிப்பந்திகள் நியமனம்

கொழும்பு, ஜூலை 18—

இலங்கை இந்தியரின் குடி உரிமை மனுக்களைத் துரிதமாகப் பரிசீலனை செய்து முடிவு காண்பதற்காக அதிக அளவில் சிப்பந்திகள் நியமிக்கப்பட்டிருப்பதாக இலங்கைப் பிரதமர் தெரிவித்துள்ளார்.

எட்டு இலட்சம் பேர் சார்பில் கிடைக்கப்பெற்ற 2,35,000 மனுக்களில், ஐந்தில் இரண்டு பங்கு தான் ஏப்ரலுக்குள் முடிவுசெய்யப் பட்டுள்ளன.

மேற்கு பாகிஸ்தானிலிருந்து இடம் பெயர்ந்து வந்துள்ள மாணவர்களின் கல்வி வசதிக்காக மத்திய புனர்வாழ்விப்பு நிறுவனம், 1956 மார்ச் 31-ந் தேதி வரையில் மொத்தம் ரூ. 5,61,00,000 செலவழித்திருக்கிறது.

பதுக்கி வைக்கப்பட்டுள்ள அரிசி!

கைப்பற்றத் தேவையில்லையாம்

புதுடில்லி, ஜூலை 17—

"வியாபாரிகளிடமிருந்து, இப்போது சரக்குகளைப் பறிமுதல் செய்யத் தேவை இல்லை"

என்று, மத்திய உணவு மந்திரி, மக்கள் சபையில் கூறியிருக்கிறார்

"உணவுப் பொருளைப் பதுக்குவோர் மீது நடவடிக்கை எடுக்க மேற்கு வங்க சர்க்கார் விசேட அதிகாரம் கோரியபோது, டில்லி சர்க்கார் தர மறுத்துவிட்டது உண்மைதானா?"

என்று, உறுப்பினர்கள் கேள்விகள் கேட்டிருக்கின்றனர்.

அப்போது உணவு மந்திரி ஜெயின் கூறியதாவது:—

"இப்போது வர்த்தகர்களிடமிருந்து உணவுப் பொருளை பறிமுதல் செய்யத் தேவை இல்லை; தாராளச் சந்தையில் பொருள்களைக் குவிக்க வேறு வழிகள் இருக்கின்றன. எங்கெல்லாம் தேவையோ அங்கெல்லாம், மணங்கு ரூ. 16 வீதம் அரிசியை நாம் வெளியிட்டால், பதுக்கப்பட்ட அரிசியும் வெளிவரும்."

தோழர் கேளப்பன் குறுக்கிட்டு, 'இந்த நியாய விலைக் கடைகள், அரிசியின் விலை ஏற்றத்தைத் தடுத்ததாக அனுபவம் கூறவில்லை,' என்று இடித்துரைத்திருக்கிறார்.

ரூ. 13,30,000 மதிப்புள்ள வைரம் கொள்ளை!

இலண்டனில் ஒரு வீதியில் வண்டிப் போக்குவரத்துக்கள் தடைப்பட்டு நின்றபொழுது ஒரு காரிலிருந்து சுமார் ரூ. 13,30,000 (1 இலட்சம் பவுன்) மதிப்புள்ள வைரக்கற்களைக் கொள்ளைக்காரர்கள் கொள்ளையடித்துச் சென்று தப்பிவிட்டனராம்!

குறைத்துக்கொள்ள இயலாதாம்!

தன்னுடைய படைபலத்தைத் தற்போது குறைத்துக்கொள்ள இயலாது என்று, ரஷ்யா அனுப்பியிருந்த கடிதத்திற்குப் பதிலளிக்கையில், பிரெஞ்சு சர்க்கார் கூறியுள்ளனர்.

சென்னை சர்க்காருக்கு தி. கொ. சர்க்கார் தகவல்?

திருவனந்தபுரம், ஜூலை 19—

வேறு ஏற்பாடுகள் செய்யப்படும் வரையில், சென்னை மாநிலத்துடன் இணையவிருக்கும் தமிழ் தாலுகாகளுக்கும் — திரு - கொச்சிக்குமிடையே, அக். 1-ந் தேதிக்குப் பிறகும்கூட, இப்போதுள்ள சர்க்கார் பஸ் போக்குவரத்தைத் தொடர்ந்து நடத்திவரத் தயாராக இருப்பதாக சென்னை சர்க்காருக்கு திரு-கொச்சி சர்க்கார் அறிவித்திருப்பதாகத் தெரியவருகிறது.

பொதுத் தேர்தல்: பிப்ரவரியில் நடைபெறும்

சென்னை, ஜூலை 19—

"திட்டமிடப்பட்டுள்ளபடி, 1957 பிப்ரவரியில், அடுத்த பொதுத் தேர்தல் நடைபெறும்," என்று இந்தியாவின் தேர்தல் கமிஷனர் சுகுமார் சென் இங்கு கூறியுள்ளார்.

கடலிலிருந்து குடி நீர்!

1990ல் ஏற்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகள்?

கடலிலிருந்து புதியதும், குடிப்பதற்குத்தக்கதுமான தண்ணீரை எடுத்துச் செல்லும் குழாய்கள் அமெரிக்காவில் நிறைந்திருப்பதை 1990-ல் பார்க்கக்கூடுமாம்!

கடலிலிருந்தும், அல்லது இப்பொழுது மனிதர்களுக்கும் 'தொழிலியல் உபயோகத்துக்கும் கூட பயன்பட முடியாத உப்பு நீரிலிருந்தும் குடிக்கும் தண்ணீரை ஏற்படுத்துவதற்கான மிகப் பெரிய முக்கிய திட்டமொன்றில் உள்நாட்டு இலாகாவின் உப்பு நீர் ஆராய்ச்சி இலாகா முனைந்துள்ளதாம்!

தமிழகத்தில் மீனவர் நிலைமை

'உழைப்புக்கேற்ற ஊதியம் கிடைக்க வாய்ப்புகள் இல்லை'

'கடும் நோய்களுக்குப் பலியாகும் மீனவரைக் காப்பாற்ற ஆட்சியிலிருப்போர் முன்வரவேண்டும்'

"மீனவர்களின் குறைகளை ஆட்சியிலிருப்போர் போக்குவதற்கு முயலவில்லை; அவர்களுக்கு வேண்டிய கட்டு மரங்களை ஆண்டுகள் பலவாகியும் கொடுத்தபாடில்லை; 'கோலா' மீன் பிடிக்கப் போகும் மீனவர்கள், திரும்பி வருவர் என்பது நிச்சயமற்ற நிலையாக இருக்கிறது; இவர்கள் 'மீளான் சொறி' என்கிற கடும் நோயால் தாக்கப்பட்டால், மீளுவது முயற்கொம்பாக இருக்கிறது; இதற்கான மருந்தை இன்னும் கண்டுபிடித்தபாடில்லை; ஆகவே, இம்மாநில சர்க்காரும், மத்திய சர்க்காரும் மீனவர்களின் பிரச்சினையை நன்கு புரிந்து கொண்டு, அவர்களுக்கு, ஆழ்கடலுக்குச் செல்லப் பயன்படாத கட்டு மரங்களுக்குப் பதில் புதிய விஞ்ஞானக் கருவிகளைத் தர வேண்டும்; கடற்படையில் மீனவர்களுக்கு இந்திமொழி தெரிந்தாலும் தெரியாவிட்டாலும் முதலிடம் தரவேண்டும், 'காலரா'வுக்கும், கடும் நோய்களுக்கும் இரையாகப் படும் குப்பத்தின் குடிசைகளுக்குப் பதில் வசதியுள்ள வீடுகளைக் கட்டித்தரவும் மீனவர்களின் குழந்தைகளுக்குக் கட்டாய இலவசக் கல்வி அளிக்கவும், பொது அமைப்புகளில் அவர்களுக்குத் தனி இடங்கள் தரவும் வேண்டும்"

இவ்வாறு, சென்னை—சூளை, நகர இளைஞர் கழகத்தின் சார்பில் 14—7—56 மாலை நடைபெற்ற வாரக் கூட்டத்தில் 'மீனவர்கள் நிலை' குறித்துத் தோழர் என். சிவரத்தினம் பேசுகையில் குறிப்பிட்டார்.

சென்னை மீன் பிம[illegible] சங்கக் [illegible] —தோழர் [illegible] அவர்களும் சொற்பொழிவாற்றினர்; அவர் பேசுகையில், மீன் பிடிக்கும் சமுதாயத்தைச் சார்ந்தவர்களை 'பரதவர்' என்றோ, 'செட்டியார்' போன்ற பெயர்களாலோ அழைக்காமல் 'மீனவர்' என்றே அழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

தோழர் என். சிவரத்தினம் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"முதன் முதல் மனிதன், கடலைக் கடக்கக் கற்றுக்கொண்டது மீன் பிடிக்கும் எண்ணத்தாலேயேதான். சில நாடுகளில் மீனவர்கள், நாட்டின் முதுகெலும்பாகக் கருதப்படுகின்றனர்; அந்தச் சமுதாயத்தால், நாட்டின் பொருளாதாரம் வளர்ந்திருக்கிறது. இன்று, உலகில் மீன பிடிக்கும் தொழிலால் அதிக வருமானம் பெறும் நாடுகளில் முதல் இடம் பெறுவது ஜப்பான்; இரண்டாவது அமெரிக்காவும், மூன்றாவது இங்கிலாந்தும் ஆகும். மீன் பிடிக்கும தொழிலுக்கு அந்த நாடுகளெல்லாம் மிகுந்த ஆதரவை அளித்து எல்லா வசதிகளையும் செய்து தருகின்றன. உலகத்திலேயே அதிக அளவு மீன்களை ஏற்றுமதி செய்யும் துறைமுகம் இங்கிலாந்து நாட்டிலுள்ள 'கிரிம்ஸ்பி' துறைமுகமாகும். இந்தத் தொழிலுக்கு அங்கெல்லாம் உயர்ந்த இடத்தை அளிக்கிறார்கள். நார்வே நாட்டுப் பாராளுமன்றத்தில், அந்த நாட்டு மக்களின் சமுதாயத்தைக் குறிக்குமுகத்தான், ஒரு பெரிய மீன் உருவத்தைத் தொங்கவிட்டிருக்கிறார்கள்.

"ஆனால், நம் தமிழகத்தில், மீன் தொழிலும், மீனவர்களும் மிகவும் பரிதாபமான நிலையிலே வைக்கப்பட்டுள்ளனர். இங்கே மீன் சாப்பிடுவது பாபம் என்றும், அதைப் பிடிக்கும் மக்கள் 'பாபி'கள் என்றும் கருதப்படுகிறது. இப்படிப்பட்ட எண்ணம் சமுதாயத்திலிருந்தாலும் அரசாங்கம் அப்படி எண்ணாமல் அதற்கென 'மீன் இலாகா' என்ற தனி இலாகா ஒன்றை வைத்திருக்கிறது. மீன், சுலபமாகச் செரிப்படையக் கூடியதும், நிறைய சத்துள்ளதும், மலிவானதுமான ஒருவகை உணவாகும் மீனவர்கள், இந்நாட்டிற்கு மூன்றில் ஒரு பங்கு உணவை அளித்துக் கொண்டிருக்கிறார்கள்.

"மீனவ மக்கள் ஒதுக்கப்பட்டவர்களாக ஆக்கப்பட்டார்கள் கடற்கரை ஓரத்தில் வசிப்பவர்களெல்லாம் மீனவர்கள் என்ற எண்ணம் இந்நாட்டில் இருந்துவருகிறது. ஆனால், கடற்கரையோரங்களில் மீனவர் மட்டும் வசிப்பதில்லை. கத்தோலிக்கர்கள், ப்ராட்டஸ்டண்டுகள், பௌத்தர்கள் முதலியோர் கூட அங்கு வாழ்கிறார்கள். மீனவரிடையே பல பிரிவுகளிருந்தாலும் அந்தச் சமுதாயத்தை ஒன்றாகக் குறிப்பிடும்போது 'மீனவர்' என்றே அழைக்கவேண்டும். நம் நாட்டின் மீனவர் உழைப்பிற்கேற்ற ஊதியம் பெறுவதில்லை. இவர்களுடைய முன்னேற்றத்தில் எவருக்கும் அக்கறையிருப்பதாகத் தெரியவில்லை.

"சென்னை நகர போலீஸ் கமிஷனர் திரு. பார்த்தசாரதி அவர்கள் 'அவரவர் அந்தந்த சாதி ஆசாரத்தைக் கடைபிடித்துக்கொண்டே முன்னேற வேண்டும்' என்று குறிப்பிட்டிருக்கிறார். இவர் கொள்கைப்படி, 'சாதி ஒழியாமல் முன்னேற்றம் காணவேண்டும்' என்பது! இப்படியிருந்தால், மீன்பிடிப்பவன் மகன் மீனவனாகவே எப்பொழுதும் இருக்க வேண்டியவனாகிறான். இத்தகைய தீதான எண்ணம் [illegible]றவேண்டும். மீனவர்களுக்குக் கல்வி வராது என்று சொல்ல முடியாது. மீனவர் சமுதாயத்திலிருந்து ஞானிகள், அறிஞர்கள் பலர் தோன்றியுள்ளனர். உத்தமர் இயேசுநாதரின் முதல் சீடரான பேதுரு ஒரு மீனவர் தான்; நம் தமிழகத்திலும் பல வழக்கறிஞர்களும் டாக்டர்களும் உள்ளனர்; தென்னகத்திலே வாழ்ந்த மாவீரர் சிங்காரவேலரும் இந்தச் சமுதாயத்தைச் சார்ந்தவர் தான்; ஆகவே வாய்ப்பிருந்தால் எந்த சமூகமும் முன்னேற முடியும்.

"நம் நாட்டில், செல்வத்தைப் பெருக்கக் கூடிய மீன் பிடிக்கும் தொழில் கவனிப்பாரற்றுக் கிடக்கிறது. தமிழகத்தில் 100-க்கு 85 பேர் புலால் உணவு உண்ணக் கூடியவர்களாயிருந்தும், மீன்களை அதிகம் பயன்படுத்துபவர் தொகை மிகவும் குறைவாயிருக்கிறது 'காட்' என்கின்ற மீனின் ஈரலிலிருந்து எண்ணெய் எடுத்து இங்கு, 'காட் லிவர் ஆயில்' என்று விற்பனையாகிறது. இதைவிட, தமிழகத்தின் கடலில் கிடைக்கும் சுறா மீனின் எண்ணெய் அதிகச் சத்தைத் தரவல்லது. இது இன்னும் சரிவரப் பயன்படுத்தப்படவில்லை. தமிழ் நாட்டின் கடலில் ஒரு ஏக்கருக்கு 10 மணங்கு மீன் கிடைக்கிறது; மீன் கிடைக்கக்கூடிய 4 இலட்சம் ஏக்கர் நீர்பரப்பில் இதுவரை 25,000 ஏக்கர்தான் பயன்படுத்தப் பட்டுவருகிறது. வங்காளக்குடாக் கடலில் மட்டும் 350 இலட்சம் டன் மீன்கள் இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதைப் பற்றி சென்னை மாநில அரசோ, மத்திய அரசோ கவனம் செலுத்துவதாகக் காணோம்.

என். வி. நடராசன் நூல் நிலையம் துவக்கவிழா

22—7—56 மாலை 6 மணிக்கு, மீர்சாகிப்பேட்டை, பிள்ளையார் கோயில் திடலில், 43-வது வட்ட தி. மு. கழகச் சார்பில், மேற்படி நூல் நிலையத் துவக்க விழா நடைபெறும். தோழர் வே. கன்னியப்பன் தலைமை தாங்குவார்; தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள் நூல் நிலையத்தைத் திறந்துவைப்பார்; தோழர் மு. கருணாநிதி அவர்கள், 'நூல் நயம்' என்ற தலைப்பில், சிறப்புச் சொற்பொழி வாற்றுவார்.

தியாகராயநகரில் மும்முனைப் போர் நினைவு நாள்

தோழர் மு. கருணாநிதி சொற்பொழிவு

19—7—56 இரவு 7 மணியளவில், சென்னை - தியாகராய நகர் தி. மு. கழகச் சார்பில், தி. ஐ. டி. நகர் (ஒய். எம். சி. ஏ. கல்லூரி எதிரில்), ஓர் மாபெரும் பொதுக் கூட்டம் தோழர் தி.மா. திருநாவுக்கரசு தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் புனுகு - நடராசன், ஏ. இராபர்ட் இயக்கப் பாடல்கள் பாடினர். தோழர்கள் எஸ். இராசவேலு, பி. அண்ணாமலை ஆகியோர் பேசிய பின்னர், தோழர் பல்லடம் பொன்னுசாமி அவர்கள், கடந்த கால கழகப் பணியினை எடுத்து விளக்கினர்.

அடுத்து தோழர் டி. வி. நாராயணசாமி அவர்கள் சென்னை சர்க்காரின் கையாலாகாதத் தன்மையை விளக்கி, கழகத் தேர்தல் குறித்து விளக்கம் தந்தார்.

இறுதியாக தோழர் மு. கருணாநிதி அவர்கள் மும்முனை போராட்ட நிகழ்ச்சிகளையும் அதில் தியாகத் தழும்புகளேற்ற தோழர்களையும், சிறைப்படுத்திய கொடுமைகளையும் விளக்கிவிட்டு, காங்கிரஸ் சர்க்கார் கடந்த எழாண்டுக் காலத்தில் நடத்திய ஊழல்களைப் புள்ளி விபரங்களுடன் எடுத்துக் காட்டி, 'நாடா மொழியா? நாடா ஜனநாயகமா?'— என்ற முதலமைச்சரின் கேள்விக்கு தக்க பதிலளித்து உணர்ச்சி மிக்கதோர் சொற்பொழிவாற்றினார். மழை பொழியும் 'குறி'கள் இருந்தும், பல்லாயிரக் கணக்கில் மக்கள் கூடியிருந்து, கொள்கை விளக்கம் பெற்றனர். (ர. கி.)

மந்திரியே! இராஜிநாமாச் செய்!

மராட்டிய ஆதரவாளர்களின் கருப்புக்கொடி ஆர்ப்பாட்டம்

நாசிக், ஜூலை 18— 'மந்திரியே! இராஜிநாமாச் செய்!' என்று, பம்பாய் மந்திரி இரேயின் இல்லத்தின் முன்பு, சம்யுக்த மராட்டிய ஆதரவாளர்கள் சுமார் 2,000 பேர் கூடி ஆர்ப்பாட்டம் நடத்தியிருக்கின்றனர்.

'நேருவின் தலைமையில் எனக்கு அசைக்கமுடியாத நம்பிக்கை இருக்கிறது,' என்று கூறிய இந்த மந்திரிக்கு, கருப்புக்கொடியும் காட்டியிருக்கின்றனர்.

மந்திரி இங்கு மாவட்ட காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தில் கலந்து கொண்டு, மலிகான் நகருக்கு வந்தபோதுதான் இந்த ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

போலீசார் சிலரைக் கைது செய்து பின்னர் விடுவித்தனராம்.

1,000 ஆஜ்மீர் ஆசிரியர்கள் வேலை நிறுத்தம்!

பள்ளிக்குச் செல்வர்; ஆனால் பாடம் போதிக்கமாட்டார்கள்

ஆறு மாதச் சம்பளம் தரப்படாததின் எதிரொலி

ஆஜ்மீர், ஜூலை 18— ஆஜ்மீர் மாநிலத்தில், சர்க்கார் உதவி பெறும் பள்ளிகளைச் சேர்ந்த 1 000 ஆசிரியர்கள், ஆக. 1-ம் தேதி முதல், கால வரையறையின்றி வேலை நிறுத்தம் செய்யப்போவதாக அறிவித்திருக்கின்றனர்.

சீர்வாகத்திற்கும், கல்வி இலாகா டைரக்டருக்கும் வழங்கியுள்ள முன்னறிவிப்பில், அவர்கள், கடந்த ஆறு மாதங்களாகத் தங்களுக்கு சம்பளம் கிடைக்காமலிருப்பதற்குக் கண்டனம் தெரிவிப்பதற்காகவே இப்படி வடிக்கையை மேற்கொள்ளப் போவதாகக் கூறியுள்ளனர்.

வேலை நிறுத்த காலத்தில், ஆசிரியர்கள் வகுப்புகளுக்குச் செல்வர்; ஆனால், பாடம் போதிக்க மாட்டார்கள்!

இந்த வேலை நிறுத்தத்தின் காரணமாக 190 பள்ளிகள் பாதிக்கப்படும்!

திருப்பூர் அறிவுக் கலை மன்ற ஆண்டு விழா

22—7—56 காலை 10 மணியளவில், மேற்படி மன்ற முதலாண்டு விழா, மன்றத்தில், பெத்தம்பாளையம் திரு. பழனிச்சாமி தலைமையில் நடைபெறும். திரு. த கோவிந்தராசன் 'நாடும் நாடகமும்' என்ற தலைப்பிலும், திரு. இளம்வழுதி 'முத்தமிழ்' என்ற தலைப்பிலும் பேசுவர்; பகல் 12 மணிக்கு ஏழைகளுக்குக் கஞ்சி வழங்கப்படும்; மாலை 6 மணிக்கு இசை விருந்து நடைபெறும்.

ரூ. 9½ இலட்சம் மோசடி செய்த முன்னாள் [illegible] மந்திரி

கோலாப்பூர் மாநில நீதிமன்றத்தில் வழக்கு

கோலாப்பூர், ஜூலை 18— ஒன்பதரை இலட்சம் ரூபாயை மோசடி செய்ததாக, கோலாப்பூர் மாநில முன்னாள் முதன் மந்திரி மீது வழக்குத் தொடரப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது.

பத்மராஜா டிரஸ்ட் நிதியிலிருந்து இந்தப் பெருந் தொகையை அவர் மோசடி செய்தாராம்.

கோலாப்பூர் பாங்கியின் டைரக்டர்கள், கணக்காயர்கள் முதலானோர் விசாரிக்கப்பட்டு வருகிறார்களாம்.

டி. ஏ. சர்வே என்ற இந்த முன்னாள் முதன் மந்திரி, இவ்வரசி பத்மராஜ டிரஸ்ட் நிதியின் காப்பாளராக இருந்தபோது, 1953-ல் இந்தத் தொகையைக் கையாடல் செய்தாராம்.

இந்தத் தொகை, கோலாப்பூர் பாங்கியில் 'டிபாசிட்' செய்யப்பட்டிருந்தது என்றும், 'டிரஸ்ட் டைரக்டர்'கள் இந்தத் தொகை முழுவதையும் பாங்கியிலிருந்து திரும்பப் பெறுமாறு கோரியுள்ளதாக பொய்ப் பத்திரம் தயாரித்து பாங்கியில் தந்து பணம் முழுவதையும் எடுத்து வேறொரு பாங்கியில் தன் பெயராலும், தன் மனைவி பெயராலும் கூட்டாகக் கணக்கு வைத்துக்கொண்டதாகவும் இந்த முன்னாள் முதன் மந்திரி மீது குற்றப் பத்திரிகை தாக்கலாகியுள்ளது.

இந்த கோலாப்பூர் பாங்கி இப்போது 'திவால்' ஆகிவிட்டதாம்!

இந்துஸ்தான் கப்பல் கட்டும் தொழிற்சாலை

5 ஆண்டுகளில் இருமடங்கு பெரிதாகும்

புதுடில்லி, ஜூலை 18— அடுத்த ஐந்தாண்டுகளுள், இந்துஸ்தான் கப்பல் கட்டும் தொழிற்சாலையை இருமடங்கு பெரிதாக்கு வதற்காக ரூ. 900 இலட்சம் செலவிட ஐந்தியப் பேரரசு உத்தேசித்திருக்கிறதாம்.

1961-ம் ஆண்டு முடிவில் இந்தத் தொழிற்சாலை, ஆண்டுதோறும் 8 முதல் 12 கப்பல்கள்வரை உற்பத்தி செய்யும் ஆற்றலைப் பெற்று விடுமாம்.

'கண்ணீர்'— நாடகம்

22—7—56 இரவு 7 மணிக்கு, மதுரை 24-வது வட்டார நெடுஞ்செழியன் மன்ற நிதிக்காக, மதுரை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் எஸ். முத்து அவர்கள் தலைமையில் புகழ் நாடக மன்றத்தார் நடிக்கும் 'கண்ணீர்' நாடகம் நடைபெறும்.

மாநில புது அமைப்பு: உள்நாட்டிலாகா ஜரூர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தற்காலிகமாக அலுவலகங்களை வைத்துக்கொள்ளவும், பிரார்திய அலுவலகங்கள் நிறுத்தவொள்ளவும் அனுமதிக்கப்பட்டிருக்கிறதாம்.

தலைநகரங்கள் பற்றி இறுதியான முடிவுகள் மேற்கொள்ளப்படாமையால், அது விஷயத்தில் தாராளமானோ, கஷ்டங்களோ எழாது என்றும் கூறுகிறார்கள்.

சர்க்கார் ஊழியர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் எங்கு வேலை செய்வது என்பதை அவர்களே தீர்மானித்துக்கொள்ளும் வாய்ப்புத் தரப்பட மாட்டாது என்றும், அவர்கள் இடமாற்றம் செய்யப்படும்போது, அவர்களது சொந்த ஊர், தாய் மொழி, வேலை செய்த இடம் இவற்றைக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும் என்றும், ஒவ்வொரு மாநிலத்திலும் வெளி மாநிலக்காரர்கள் குறைந்தபட்சமாக இருக்கவேண்டிய தேவையும் கவனிக்கப்படும் என்றும் உள்நாட்டிலாகாவினர் கூறியிருக்கின்றனராம்.

மாநில புது அமைப்பு பற்றிய மாநில சர்க்காரின் நடவடிக்கைகள் எவ்வளவு தூரம் முன்னேறியுள்ளன என்பதை டில்லி சர்க்காரால் கோரப்பட்டிருக்கிறதாம்.

வள்ளுவர் வாரமும்— கழக ஆண்டு விழாவும்

21—7—56 மாலை 6 மணியளவில், சென்னை—பழைய வண்ணை கொருக்கையம்பதி, திருட்டினசாமி தோட்ட மைதானத்தில் (கொருக்குப்பேட்டை இரயில் நிலைய சமீபம்) திருவள்ளுவர் முன்னணிக் கழக நான்காவது ஆண்டு விழாவும், வள்ளுவர் நினைவு நாளும் தோழர் கா. அப்பாதுரையார் தலைமையில் நடைபெறும். தோழர் க. அன்பழகன், சுரதா ஆகியோர் பேசுவர்.

கழகக் கூட்டம்

★

போளூர் :

பழைய பஸ் நிலையத்தில்
22—7—56 மாலை 6 மணிக்கு
தலைவர் :
எஸ். கணபதி
பேசுவோர் :
கண்ணதாசன்
எஸ். எஸ். தென்னரசு
தமிழ்ப்பித்தன்

★

சிதம்பரம் :

டவுன் ஆல் மைதானத்தில்
22—7—56 மாலை 6-மணிக்கு
தலைவர் :
இரா. சக்கரவர்த்தி
பேசுவோர்:
ஈ. வெ. கி. சம்பத்
பொன்—சொக்கலிங்கம்
இரெத்தின—பாலகுருசாமி

★

வேடிச்சிபாளையம் :

அழகிரி திடலில்
22—7—56 மாலை 6 மணிக்கு
தலைவர் :
வி. பொ. தங்கவேலு
பேசுவோர் :
சிற்றுளி—சுப்பிரமணியம்
டி. பி. மூர்த்தி
எம். கே. கரிகாலன்

★

அரியநகர்—புதுவை :

தி. மு. கழக 2-வது ஆண்டு விழா
22—7—56 மாலை 6-மணிக்கு
தலைவர் :
சு. கிருட்டிணன்
பேசுவோர்:
என். சிவரத்தினம்
கே. எஸ். கண்ணன்
மா. சின்னப்பிள்ளை
பு. ரா. திராவிடச்செல்வம்
புதுவை டி. லோகநாதன் குழுவினர் இன்னிசை வழங்குவர்.

★

திருப்பனந்தாள் :

தேரடியில்
21—7—56 மாலை 6 மணிக்கு
தலைவர் :
ம. கோ. மணி
பேசுவோர் :
டி. கே. சீனிவாசன்
பொ. தருமன்

சென்னை—7-வது வட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம்

22—7—56 காலை 9-30 மணியளவில், கழகப் பணிமனையில் கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெறும். அதுபோது, வரவு-செலவு, கழக நிதி நிலைமையை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுத்தல், வாக்காளர் பட்டியலில் விடுபட்டோரின் பெயரை பதிவு செய்ய முயற்சி செய்தல் ஆகிய பிரச்சினைகள் ஆய்வுக்கு வரும்.

சென்னை—23-வது வட்ட தி. மு. கழக பொது உறுப்பினர் கூட்டம்

22—7—56 காலை 10 மணிக்கு கழக மனையில், பொது உறுப்பினர் கூட்டம் நடைபெறும்; அதுபோது செயற்குழுத் தேர்தல், வரவு—செலவு கணக்கு, மற்றும் பல பிரச்சினைகள் ஆய்வுக்கு வரும்.

வேலூர் நகர தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம்

22—7—56 காலை 9 மணியளவில், வேலூர் டவுன் ஆலில், நகர தி. மு. கழக செயற்குழுக் கூட்டம் நடைபெறும்.

பொதுக்கூட்டம் ஒத்திவைப்பு

22—7—56-ல், மாயூரம், திருவிழந்தூர் கடைவீதியில் நடைபெறுவதாக இருந்த பொதுக்கூட்டம் 5—8—56-க்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

திரு. வி. க. இலக்கிய மன்றம்

21—7—56 மாலை 6½ மணிக்கு, சென்னை—வண்ணை, தியாகராயர் கல்லூரியில், 'புரட்சிக் கவிஞர்' என்ற தலைப்பில், திரு. இரா. துரைராசன் பேசுவார்.

சென்னைக் கல்விச் சங்கம்

22—7—56 மாலை 5 மணிக்கு, பட்டாளம், ஸ்ட்ரான்ஸ் ரோடு, ஆண் பள்ளியில் 'ராடு' என்னும் பொருள் பற்றி திரு. க. வீ. குருசாமி தலைமையில், திருவாளர்கள் தொ. இரா. செயராமன், வி. ப. கோவிந்தசாமி சொற்பொழி வாற்றுவர்.

தமிழர் நல்வாழ்க்கைக் கழகம்

22—7—56 காலை 9 மணிக்கு, சென்னை—1, ஆயலூர் முத்தையா முதலி தெரு, எண் 34 இல்லத்தில், தமிழ்த் திருமணம் செய்து வைப்போர் அனைவரும் திரு. மயிலை-வேமுத்து தலைமையில் கூடிப் பேசுவர்.

தூனா—நகர இளைஞர் கழகம்

21—7—56 மாலை 6 மணிக்கு, எண் 10 மாணிக்க செட்டித் தெரு, கழக மனையில் தோழர் ஆர். எஸ். பாண்டியன் 'விடுதலை வரலாறு' என்பது பற்றிப் பேசுவார்.

இராயபுரம் இலக்கிய மன்றம்

21—7—56 மாலை 7 மணிக்கு, மன்றச் சார்பில், கல்மண்டபம் நகராண்மைக் கழக ஆண் பள்ளியில், திரு அ ஞானசுந்தரம் அவர்கள் குறளில் 'நீத்தார் பெருமை' குறித்து விரிவுரை நிகழ்த்துவார். சென்னை நகராட்சி (வட்ட) உறுப்பினரான பி. தங்கராசன், கே. கணேசன் துவக்க உரை நிகழ்த்துவர்.

• • •

22—7—56 காலை 9½ மணிக்கு, பனைமரத்தொட்டி அட்டபாளையம் பஜனைக் கோவிலில், ஓர் இலக்கியச் சொற்பொழிவுக் கூட்டம் நடைபெறும். திரு. ம. பொ. கேசவராமன் தலைமை வகிக்க திருவாளர்கள் அ முனுசுவாமி, அ. ஆதியபாதம் முறையே 'குறுந்தொகைக் காட்சிகள்' 'முல்லைக் காட்சிகள்' என்ற தலைப்புகளில் பேசுவர்; மன்ற வளர்ச்சிக்கான ஆலோசனைக் கூட்டமும் நடைபெறும்.

வட சென்னை குறள்நெறிக் கழகம்

21—7—56 மாலை 6 மணிக்கு, கழகக் குழுக் கூட்டம் கழக அறையில் நடைபெறும். கழகத்தின் ஆக்கவேலைகள் குறித்து ஆராயப்படும்.

சொற்பயிற்சிக் கூட்டம்

22—7—56 மாலை 6 மணியளவில், செனாய்நகர் தி. மு. கழகப் பணிமனையில் தோழர் ஆர். வெங்கடேசன் தலைமையில், 'வடக்கும்—தெற்கும்' எனும் பொருள் பற்றி தோழர்கள் எ. ஜி. இராசன், ஜி. கனகசபாபதி ஆகியோர் பேசுவர்.

• • •

22—7—56 காலை 10 மணியளவில், பெங்களூர்—அக்கிப்பேட்டை தி. மு. கழகப் பணிமனையில், பயிற்சி மன்றத்தின் சார்பில், தோழர் வே. இளஞ்சேரன் தலைமையில், 'திராவிடத்தின் கனிப் பொருள்கள்' என்ற தலைப்பில், சொற்பயிற்சிக் கூட்டம் நடைபெறும்; 'தோழர்கள் பலர் பேசுவர்.

காவியக் கலை அரங்கம் செயற் குழுக் கூட்டம்

22—7—56 காலை 10 மணியளவில், சென்னை — இராயபுரம், எண் 5, ஆண்டியப்ப கிராமணி தெருவிலுள்ள காவியக் கலை அரங்கச் செயற் குழுக் கூட்டம், 'மலர்' இதழ் அலுவலகத்தில் நடைபெறும்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.